ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2277/51 - 2022 අප්‍රේල් මස 27 වැනි බදාදා - 2022.04.27
2277/51 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. : 83

**2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

பிரிவு 10(1) (அ) இன் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 10(1) (அ) இனால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தொழிற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, அனைத்து உற்பத்தியாளர்கள், தயாரிப்பாளர்கள், களஞ்சிய உரிமையாளர்கள், வழங்குநர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது வியாபாரிகள் எவரும் அவரது உடைமையில், பாதுகாப்பில் அல்லது அவரது கட்டுப்பாட்டிலுள்ள பொருட்கள் தொடர்பாக, பின்வரும் தகவல்களை உள்ளடக்கி உற்பத்தியாளர், தயாரிப்பாளர், களஞ்சிய உரிமையாளர், வழங்குநர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரியால் வழங்கப்பட்ட விற்பனைச் சிட்டை அல்லது பற்றுச் சீட்டு அல்லது விலைப்பட்டியலை, எழுத்து அல்லது அச்சடிக்கப்பட்ட அல்லது இலத்திரனியல் மூலமாக உறுதிப்படுத்தினாலன்றி, அப்பொருட்களை கொள்கலன், பண்டகசாலை, குதம், வியாபார நிலையம் அல்லது வேறு ஏதேனும் இடங்களில் விற்பனை செய்யவோ, களஞ்சியப்படுத்தவோ, சேகரிக்கவோ, விநியோகிக்கவோ, விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ அல்லது கோரவோ முடியாதென பணிப்புரை விடுக்கின்றது.

1. வழங்குநர் பெயர் மற்றும் முகவரி
2. கொள்வனவுத் திகதி
3. கொள்வனவு செய்யப்பட்ட விலை
4. பொருட்களின் வகை
5. அளவு
6. தொகுதி இலக்கம் (காணப்படுமாயின்)

இந்த பணிப்புரையானது 2022, ஏப்பிறல் 27 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க (ஓய்வு பெற்ற),
தவிசாளர்.

கொழும்பு.
2022, ஏப்பிறல் 27.

EOG 04 - 0212

1A - G 36702 — 110 (2022/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.